# பொன்னேரி நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27.01.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் டிசம்பர் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மாண எண்:164 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: பதிவு செய்யப்படுகிறது .**

**பொருள் எண் 2**

பொன்னேரி நகராட்சியில் பழவேற்காடு சாலையில் உள்ள மேம்பாலத்தில் புதியதாக அமைக்கப்பட்ட மின்கம்பங்களுக்கு மின்இணைப்பு வழங்க மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற கேட்பு கட்டணம் ரூ.15300/-ஐ செலுத்தி மின் இணைப்பு பெற்றமைக்கு ஒப்புதல் வழங்கிடவும், கீழ்க்காணும் விவரப்படியான இடங்களில் உள்ள உள்ள மின்மோட்டார்களுக்கு புதிய மின்இணைப்பு பெற மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற கேட்பு கட்டணங்களை செலுத்திடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | விவரம் | கேட்பு தொகை |
|---|---|---|
| 1 | வார்டு எண் 3 பெரியதம்பி தெரு குடிநீர் மோட்டாருக்கு மின்இணைப்பு பெற பட்டியல் தொகை | ரூ.21100 /- |
| 2 | வார்டு எண் 5 வேணுகோபால் தெரு குடிநீர் மோட்டாருக்கு மின்இணைப்பு பெற பட்டியல் தொகை | ரூ.21100 /– |
| 3 | வார்டு எண் 12 அரிஅரன் பஜார் தெரு தெருமின் விளக்குகளுக்கு மின்இணைப்பு பெற பட்டியல் தொகை ( 7 மின்கம்பங்கள் ) | ரூ.4250 /– |
| 4 | வார்டு எண் 12 அரிஅரன் பஜார் தெரு தெருமின் விளக்குகளுக்கு மின்இணைப்பு பெற பட்டியல் தொகை ( 8 மின்கம்பங்கள் ) | ரூ.4250 /– |

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 262/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 165 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 3</u>**

பொன்னேரி நகராட்சியில் UTIS மென்பொருள் மூலம் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கு ரசீதுகள் போடுவதற்கு தேவையான ரசீதுகள் தீர்ந்துவிட்டபடியால் புதியதாக ரசீதுகள் அச்சடிக்கவும், அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பதிவேடுகள் , படிவங்கள், எழுதுபொருட்கள், A4/FS பேப்பர்கள் ஆகியவற்றை தேவைக்கேற்ப விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. **3.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**( ந.க.எண் 122/2022 / அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 166 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**<u>பொருள் எண் 4</u>**

பொன்னேரி நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக Fogging Machine கொள்முதல் செய்ய விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படியான விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. Swart Enterprises, Chennai - ரூ.**82010**/-
2. RNM Enterprises, Chennai - ரூ.**88650**/-
3. Anand Agencies , Katpadi - ரூ.**85200**/-

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த Swart Enterprises நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**( ந.க.எண் 1186 /2022 /அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 167 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 5</u>**

பொன்னேரி நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி வழங்கப்படும் தினமலர், தினமணி, தினகரன் ஆகிய நாளிதழ்களுக்கு ஜுலை **2022** முதல் தற்போது வரை தொகை வழங்கவேண்டியுள்ளதால் உரிய தொகையினை நாளிதழ் ஏஜென்டுக்கு வழங்கிட தோராய செலவினம் ரூ.**10000** /- க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 707 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 168 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 6**

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினிகள், புகைபோக்கி கொசு ஒழிப்பு மருந்துகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குளோரினேஷன் செய்ய பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் , பினாயில், அபேட், இதர பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை ஆண்டு ஒப்பந்ததாரரிடம் கொள்முதல் செய்திட தோராய செலவினம் ரூ **3.00** /- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 341 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 169 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 7**

அரசாணை (நிலை) எண்.**116**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.3) துறை, நாள் **24.08.2022**–ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.**38553/2022**/EA2-SWM–**2**, நாள் **10.01.2023**–ல் பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் அடிப்படையில், திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

| Quantity of Waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated base cost per day (Rs .in lakh) | Estimated base cost per year (Rs. In lakh) | Applicable GST 18% and LWF 1%(Rs. In lakh) | Estimated total cost per year ((Rs. In lakh) |
|---|---|---|---|---|---|
| 11.55 | 5054.52 | 0.58 | 211.70 | 40.22 | 251.92 |

மேலும், நகராட்சியின் வாகனங்களை வாடகை அடிப்படையில் வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும், நாள் ஒன்றுக்கான வாடகை நிர்ணயம் செய்யப்பட்டும், அதற்குரிய தொகையினை பிரதி மாத பட்டியலில் பிடித்தம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| S.No | Category | Available Vehicles | After ULB use available for Rent | Rent fixed by per day | Collectable Rent per day |
|---|---|---|---|---|---|
| 1 | PUSHCART | 7 | 7 | 10 | 70 |
| 2 | HCV | 2 | 0 | 400 | 0 |
| 3 | HCV (Compactor) | 1 | 0 | 1000 | 0 |
| | **TOTAL** | **10** | **7** | | **70** |

மேலும், தற்போது நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மைப்பணியாளர்களின் பணிகளின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<table>
<tr><th>S.No</th><th>Activity</th><th>No of Permanent Cleanliness Worker Assigned</th><th>Type</th><th>LCV</th><th>HCV</th></tr>
<tr><td>1</td><td>Park Sweeping</td><td>3</td><td>-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>2</td><td>For Bus Stand</td><td>8</td><td rowspan="2">HCV</td><td rowspan="2">-</td><td rowspan="2">1</td></tr>
<tr><td>3</td><td>For Market</td><td>5</td></tr>
<tr><td>4</td><td>For Bushes removal</td><td>4</td><td rowspan="3">LCV</td><td rowspan="3">1</td><td rowspan="3">-</td></tr>
<tr><td>5</td><td>For Shoulder earth removal</td><td>2</td></tr>
<tr><td>6</td><td>For Drain Cleaning</td><td>1</td></tr>
<tr><td>7</td><td>Secondary Collection</td><td>1</td><td>HCV</td><td>-</td><td>1</td></tr>
<tr><td></td><td>Total</td><td>24</td><td></td><td>1</td><td>2</td></tr>
</table>

மேலும், வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **Sl.No** | **Desctiption of the activity** | **Nos/Length** |
|---|---|---|
| 1 | Door to Door collection of segregated waste from Households using pushcart and handover the waste to processing center / handling facilities | 1003 Households |
| 2 | Door to Door collection of segregated waste from Households using BOV and handover the waste to processing center / handling facilities | 5013 Households |

| | | |
|---|---|---|
| 3 | Door to Door collection of segregated waste in Households using LCV and handover the waste at processing center / handling facilities | 4011 Households |
| 4 | Door to Door collection of segregated waste in small size Commercial Establishment using Low Commercial Vehicle and handover the waste at processing center / handling facilities | 984 Commercial Establishments |
| 5 | Door to Door collection of segregated waste in larger size Commercial Establishment using High Commercial Vehicle and handover the waste at processing center / handling facilities | 656 Commercial Establishments |
| 6 | Sweeping the Bus Route Roads on daily basis and handover the waste at processing center / handling facilities | 13.22 KM of Roads |
| 7 | Sweeping the Bus Route Streets on daily basis and handover the waste at processing center / handling facilities | 11.03 KM of Streets |

மேற்கண்டவாறு, அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME.3) துறை, நாள் 24.08.2022–ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை வழிகாட்டுதலின்படியும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளின்படியும் பொன்னேரி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை குறித்த பணிகளுக்கு வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் பணிகளை மேற்கொள்ள மூன்று வருடங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட பணிகளுக்கு ஒரு வருடத்திற்கு மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ. 251.92 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்த பணியினை மாநில அளவிலான நாளிதழ்களில் விளம்பரம் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :-</u>

1) மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்தும், 15வது நிதிக்குழுவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கட்டப்பட்ட தொகையின் (Tied Amount) கீழும் மேற்கொள்ளலாம்.

2) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.727/2022/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 170 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் அளிக்கிறது .**

## பொருள் எண் 8

பொன்னேரி நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் . 492 நாள் 19.09.2013 மற்றும் அரசாணை எண் 500 நாள் 29.12.2016-ன்படி ரூ.54.78 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது. அதன்படி நகராட்சி பகுதிகளில் 26.137 கி.மீ நீளத்திற்கு பணிகள் முடிவுற்ற நிலையில் தற்போது தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2022–23 ல் முதற்கட்டமாக 6.285 கி.மீ நீளத்திற்கு ரூ. 392.00 இலட்சம் மதிப்பீட்டில் 28 சாலைப்பணிகளை 2 சிப்பங்களாக மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு முறையே ஒப்பந்தபுள்ளிகள் கோரி பணிகள் நடைபெறும் நிலையில் உள்ளது. மேற்படி சாலைப்பணிகளில் சிப்பம் 1ல் உள்ள காளிகாம்பாள் தெரு, புதிய தேரடி தெரு , அம்பேத்கர் தெரு, சாமுண்டீஸ்வரி நகர் பிரதான சாலை, சாமுண்டீஸ்வரி நகர் முதல் குறுக்கு தெரு, பெருமாள் நகர் 3வது தெரு ஆகிய சாலைகளிலும், சிப்பம் 2ல் உள்ள நாடார் ரைஸ்மில் தெரு, பாலாஜி நகர் பிரதான சாலை, பாரதி தெரு, கள்ளுக்கடைமேடு, சங்கர் நகர், காந்தி தெரு என்.எஸ்.சி போஸ் தெரு ஆகிய சாலைகள் சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையின்போது மிகவும் பாதிப்படைந்த நிலையில் சாலையில் அடிப்பரப்பு மிகவும் பழுதடைந்துள்ளதால் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு நேரடியாக WMM அமைக்க இயலாத நிலை உள்ளது. மேலும் அப்பகுதிகளில் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின்படி ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோருடன் இடம் தல ஆய்வு மேற்கொண்டதில் புதியதாக அமைக்கப்பட உள்ள சாலைகளின் ஆயுளை கருத்திற்கொண்டு பின்வருமாறு தெருக்களில் Granular Subbase மற்றும் BT அமைக்கவேண்டி உள்ள நிலை உள்ளதாலும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பின்வரும் மதிப்பீடுகளை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எ | வார்டு எண் | சாலையின் பெயர் | நீளம் ( மீ ) | மதிப்பீட்டு தொகை ( இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1 | 6 | அம்பேத்கர் தெரு ( GSB ) | 808 | 9.60 |
| 2 | 22,17, 24 | காளிகாம்பாள் தெரு , சாமுண்டீஸ்வரி நகர் பிரதான சாலை, சாமுண்டீஸ்வரி நகர் 1வது குறுக்கு தெரு, பெருமாள் நகர் 3வது தெரு ( GSB) | 693 | 9.40 |
| 3 | 7 | கள்ளுக்கடைமேடு மற்றும் பாரதி தெரு ( BT ) | 110 | 7.30 |
| 4 | 7 | பாலாஜி நகர் பிரதான சாலை ( BT ) | 85 | 5.70 |
| 5 | 26 | காந்தி தெரு ( BT ) | 132 | 8.80 |
| 6 | 26 | சங்கர் நகர் பிரதான சாலை ( WMM ) | 320 | 5.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| **7** | **19** | நாடார் ரைஸ்மில் தெரு மற்றும் என்எஸ்சி போஸ் தெரு ( WMM ) | **377** | **6.10** |
| **8** | **10** | தேரடி தெரு ( WMM ) | **250** | **4.30** |
| **9** | **22, 21** | எம்.ஜி.ஆர் நகர், இரட்டைமலை சீனிவாசனார் சாலை ( WMM ) | **365** | **6.00** |
| | | **மொத்தம்** | **3140** | **62.70** |

**அலுவலக குறிப்பு**

திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண் 691/2022 / அ1

நகர்மன்ற தீர்மாண எண்: 171 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: அனுமதி அளிக்கப்படுகிறது .**

**பொருள் எண் 9**

நகராட்சி நிர்வாக இயக்குநர், நகர் நிர்வாக வளாகம் , சென்னை அவர்களின் கடித ந.க.எண் 19009 /2022 SBM–1 நாள் 25.11.2022ன்படி பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன்கீழ் ரூ.186.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண். 23–ல் பஞ்செட்டி சாலை சர்வே எண் 337/5 ல் உள்ள குப்பை கிடங்கில் உள்ள 26435 கன அடி குப்பைகளை உயிரியல் செயலாக்கம் முறையில் அகற்றும் பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 06.01.2023 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படியான ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** |
|---|---|
| 1. | M/s S.P. Builders,<br>Chennai |
| 2. | M/s. Saram Enwiro Services ,<br>Chennai |

மேற்படி பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் விலை உறை (Price Bid) திறக்கப்பட்டதில் M/s. S.P. Builders நிறுவனம் மதிப்பீட்டை விட 3.85 % அதிகமாக விலை விகிதம் அளித்துள்ளார். அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தை விலைகுறைப்பு செய்துதர கோரியதில் அந்நிறுவனம் ஒபபந்தப்புள்ளி விகிதத்தினை ரூ.779.00 /MT என குறைத்து அளித்துள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 681 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 172 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது .**

**பொருள் 10**

நகராட்சி நிர்வாக இயக்குநர், நகர் நிர்வாக வளாகம் , சென்னை அவர்களின் கடித ந.க.எண் 31028/2022/ MA1 நாள். 14.10.2022 ன்படி 1257 எண்ணிக்கையிலான குழல் விளக்குகள், 634 எண்ணிக்கையிலான CFL தெருமின்விளக்குகளை மின் சேமிப்பின் அவசியம் மற்றும் பயனீட்டு மின்கட்டணங்களை குறைக்கும் வகையில் LED தெருமின் விளக்குகளாக மாற்றியமைக்கும் பணியினை ரூ.117.98 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து 27.12.2023 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படியான ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | M/s Kumaran Industries ,<br>Chennai |
| 2. | M/s. Apex Industries,<br>Karaikudi i |

மேற்படி பெறப்பட்ட இரண்டு நிறுவனங்களின் விலை உறை (Price Bid) திறக்கப்பட்டதில் M/s. Apex Industries நிறுவனம் மதிப்பீட்டை விட 4.64 % அதிகமாக விலை விகிதம் அளித்துள்ளார். அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தை விலைகுறைப்பு செய்துதர கோரியதில் அந்நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை மதிப்பீட்டை விட 0.01 % என குறைத்து அளித்துள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 691 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 173 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 11**

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்திவரும் டிரைசைக்கிள் 10 எண்ணிக்கை, தள்ளுவண்டிகள் 30 எண்ணிக்கை ஆகியவை பழுது ஏற்பட்டுபோது பொதுசுகாதார குப்பைகள் சேகரிக்கும் பணியில் சிரமம் ஏற்படுவதால் அவற்றினை பழுது நீக்கம் பணியினை பொதுநிதியில் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 626 /2011 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 174 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருவதால், தற்போது சாலைகள் அனைத்தும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. இது தொடர்பாக நாளிதழ்களிலும் தொடர்ந்து செய்திகள் வந்தவாறு உள்ளது. எனவே சேதமடைந்துள்ள அனைத்துசாலைகளையும், தற்காலிகமாக ரப்பீஸ் வைத்து சீரமைக்க வேண்டியுள்ளது. சில இடங்களில் JCB மூலம் சமன்செய்யவேண்டியும் உள்ளது. எனவே அதற்காக உத்தேச செலவினம் ரூ.3.75 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 175 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## பொருள் எண் 13

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சியில் திருமதி எஸ். அனுகிரகா என்பவருக்கு சொந்தமான சர்வே எண் 178/3A, 3B, 3C, 180/1A1B - ல் 1.15 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் , திருவள்ளூர் மண்டலம் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி மனைப்பிரிவில் உள்ள மொத்த சாலைகள் 1708.70 ச.மீ , உள்ளாட்சிக்குரிய பகுதி 15.96 ச.மீ ஆகியவற்றை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது .

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 1101 /2022 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 176 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

## <u>பொருள் எண் 14</u>

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி நகராட்சியில் கும்மங்கலம் கிராமம் சர்வே எண் 215/2C1, 216/1A1B, 1A1C, 1A2B ல் கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு துறையிடம் அனுமதி கோரியதில் மேற்படி இடத்திற்கான அணுகுசாலை விவரம் கோரி நகர் ஊரமைப்புத்துறையால் கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி இடத்தின் 18878.00 ச.அ அளவுள்ள 40 அடி அகல சாலையினை பொன்னேரி நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். 1090 /2022 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 177 நாள்: 27.01.2023

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்குகிறது.**

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.